# சமரச தீபம்

1266

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

ஆக்கியோர் :

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரனார்

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

மூன்றாம் பதிப்பு

UNIVERSITY EXTENSION LIBRARY
18 DEC 1957
MADURAI

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை,
சென்னை.

1946

உரிமை
ஆக்கியோர்க்கே

விலை அணா 6

*Univ. Grants Commission.*

Printed at the Sadhu Press, Royapettah, Madras.
P. I. C. No. M. S. 115—Copies 1000—20-12-1946

1441

# முன்னுரை

உலகம் இப்பொழுது எந்நிலையில் இருக்கிறது? அதைச் சொல்லலும் வேண்டுமோ! உலகம் இயற்கைச் சன்மார்க்கத்தினின்றும் வழுவிச் செயற்கைத் துன்மார்க்கத்தில் வீழ்ந்து வருகிறது. இது கண்கூடு. இவ்வீழ்ச்சிக்கு அடிப்படையான காரணம் என்னை? மக்கள் அறியாமையால் அரசியலுக்கும், புரோகிதத்துக்கும் அடிமைப்பட்டு இரையாகி வருவதைச் சிறந்த காரணமாகக் குறிக்கலாம்.

ஆங்காங்குள்ள அரசியல் வாதிகள், பேர், புகழ், தன்னலம் முதலியவற்றைக் குறிக்கொண்டு, குடியாட்சி என்றும் - கோனாட்சி என்றும் - குடிக்கோனாட்சி என்றும் - பலதிற அரசுகளை வகுத்து, மக்களை மயக்கி, ஒரு பக்கம் வஞ்சித்து வருகிறார்கள்; மற்றொரு பக்கம் புரோகிதர்கள் நின்று, பல திறக் கண்மூடி வழக்க ஒழுக்கங்களை நாளுக்கு நாள் பெருக்கி மக்களை ஏமாற்றி வஞ்சித்து வருகிறார்கள். இவ்விரு வழியிலும் மன்பதை நெருக்குண்டு துன்புறுகிறது. வஞ்சனைகள் பெருகப் பெருக, உலகம் சன்மார்க்கத்தினின்றும் வழுக்கி வீழ்தல் இயல்பன்றோ?

துன்மார்க்க வீழ்ச்சிக்கு அழிவுவேலை ஒருபாலும், சன்மார்க்க எழுச்சிக்கு ஆக்கவேலை மற்றொருபாலும் நடந்து வருதல் வேண்டும். அழிவும் ஆக்கமும் சேர்ந்த ஒன்றே சீர்திருத்தம் என்பது.

இந்நாளில் உலக முழுவதும், சீர்திருத்தத்தை விரும்புவது வெள்ளிடை மலை. இவ்விருப்பம் இயற்கை அன்னையின் ஏவலால் எழுவதாகும். இயற்கை அன்னை உலகைச் செப்பஞ் செய்ய, மறக்கருணையையும் அறக்கருணையையும் சொரிந்து

வருவதை அறிஞர் தமது கூர்த்த மதியால் உணரலாம். மறக் கருணை அழிவுக்குத் துணைசெய்வது ; அறக்கருணை ஆக்கத் துக்குத் துணை செய்வது. இயற்கை அன்னையின் வழி நின்று தொண்டாற்ற வேண்டுவது அன்பர் கடமை.

உலகில் பலதிற இயக்கங்கள் எழுந்துகொண்டே இருக் கின்றன. அவ்வவ்வியக்கத்தில் ஈடுபடும் அறிஞர், அதை அதைச் சன்மார்க்கத்தில் செலுத்த முயலல் வேண்டும். இம் முயற்சிக்கு ஒல்லும் வகையாதல் துணைபோக வேண்டுமென் பது எனது தணியா வேட்கை.

பலதிற மகாநாடுகளில் தலைமை வகிக்கும் பேறு எனக்கு அடிக்கடி வாய்ப்பதுண்டு. அம்மகாநாடுகளில் குறிக்கத்தக்கன சில. அச்சிலவற்றுள் மாயவரத்தில் கூடிய **சமரச சன்மார்க்க் மகாநாடும்** ஒன்று. அம்மகாநாடு, ஒருவித சரித்திர சம்பந்த முடையதாகலின், அதைப்பற்றி இம்முன்னுரையில் மிகச் சுருங்கிய முறையிலாதல் கூறுதல் பொருத்தமென்று யான் கருதுகிறேன்.

வாழ்வில் பெறுதற்கு எளியன பல ; அரியன சில. அவ் வரியனவற்றுள்ளும், அரியது ஒன்றுளது. அஃது எது ? அதுவே நட்பு என்பது. 'செயற்கரிய யாவுள நட்பின்' என்றார் **திருவள்ளுவனார்.**

யான் பலதிற உலகில் உலவும் பேறுடையேன். தமிழ் உலகு, சமய உலகு, அரசியல் உலகு, தொழிலாளர் உலகு, சீர்திருத்த உலகு முதலிய பல உலகங்கள் எனக்கு உண்டு. இப்பல உலகில் உலவுவது எனது இயல்பாகிவிட்டது. ஒவ் வோர் உலகிலும் உரிய நண்பர் சிலர் எனக்கு வாய்த்துள் ளனர். பொல்லாதது என்றும், நட்புக்குரிய ஈரமில்லாதது என்றும் சொல்லப்படும் இக்கால அரசியல் உலகிலும் இரண் டொரு நண்பரை யான் பெற்றேன். அவருள் இங்கே குறிக் கத்தக்கவர் ஒருவர். அவர், திருமிகு - ஈ. **வே. இராமசாமி நாயக்கர்** ஆவர்.

திருமிகு - இராமசாமியாரது நட்பு, முதன் முதல் எனக்கு 1919 - ம் ஆண்டில் கிடைத்தது. அன்று முதல் அவரும் யானும் நண்பராகித் தமிழ்நாட்டுக் - காங்ரஸில் சேவை செய்துவந்தோம். 1925-ம் ஆண்டு முதல், நண்பர் நாயக்கருக்குக் காங்கரஸ் பற்று, படிப்படியாகக் குறையலாயிற்று. இதற்குக் காரணம், 'சிலகூட்டத்தார் சூழ்ச்சி' என்று சொல்லப் பட்டது.

1925-ம் ஆண்டின் இறுதியில் காஞ்சியில் எனது தலைமையில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் (தமிழ் மாகாண மகாநாடு) கூடிற்று. அதில் நண்பர் இராமசாமியாரும், மற்றுஞ் சிலரும் சேர்ந்து ஒரு தீர்மானம் கொணர்ந்தனர். தலைவன் என்ற முறையில் நீதிநெறி நின்று, பொருந்திய காரணங்கூறி, அத்தீர்மானத்தைத் தள்ளும் நிலைமை எனக்கு ஏற்பட்டது. அச்செயல், நண்பர் நாயக்கருக்குச் சீற்றமூட்டிற்று. அதன் பயனாக, அவர், காங்கிரஸ் கொள்கைக்கு மாறுபட்ட 'ஜஸ்டிஸ்' கட்சிக்கு வெளிப்படையாக ஆதரவு நல்கத் துணிவு கொண்டனர். அதனால், அவருக்கும் எனக்கும் அரசியலில் கருத்து வேற்றுமை அரும்பலாயிற்று.

1926-ம் ஆண்டு இறுதியில், அதுபோழ்து தமிழ்நாட்டுக் காங்கரஸ் நிருவாகக் கூட்டத்தவரா யிருந்தவருள் பெரும்பான்மையோர் ஒன்றுசேர்ந்து (கான்பூர்) காங்கரஸ் நிறைவேற்றிய தீர்மானங்கள் சிலவற்றுக்கு மாறுபட்டு நடக்க உறுதி கொண்டனர். அதற்குத் துணைநிற்க, எனது மனச்சான்று இடங்கொடுக்கவில்லை. அதனால், தமிழ் நாட்டுக் காங்கரஸ் நிருவாகக் கூட்டத் தொடர்பைமட்டும் யான் அறுத்துக் கொண்டேன்; காங்கரஸில் சாதாரண அங்கத்தினனாக இருந்து காலங்கழிக்கலானேன்.

நண்பர் இராமசாமி நாயக்கர் முயற்சியால் 1927-ம் ஆண்டில் மாயவரத்தில் 'ஜஸ்டிஸ்' கட்சிச் சார்பில் ஒரு பெரிய மகாநாடு கூடிற்று. அம்மகாநாட்டிற்கு இப்பொழுது சென்னை

அரசாங்கத்தில் சட்ட அமைச்சராக உள்ள ஸர். கிருஷ்ணன் நாயர் தலைமை வகித்தார். தமிழ்நாட்டில் கூடிய பல மகா நாடுகளில் அதனை ஒரு சிறந்த மகாநாடென்றே கூறலாம்.

அம் மகாநாட்டுப் பந்தரில் எனது தொண்டும் ஏதாவது நிகழ்தல் வேண்டும் என்று நண்பர் நாயக்கர் உள்ளிட்ட சிலர் விரும்பினர். அவ்விருப்பம், **சமரச சன்மார்க்க மகா நாடாக** உருக்கொண்டது. அதற்குரிய தலைமைப் பதவி எனக்கே வழங்கப்பட்டது.

இரண்டு மகாநாடுகளும் ஒரே இடத்தில் கூட நேர்ந்தமையால், 'ஜஸ்டிஸ்' கட்சித் தலைவர்களில் ஏறக்குறைய எல்லாரும் சமரச சன்மார்க்க மகாநாட்டிலும் கலந்து அளாவினர். மகாநாடு முடிந்த பின்னை, 'ஜஸ்டிஸ்' கட்சித் தலைவர்களிடம் விடைபெற யான் போனேன். அப்பொழுது, 'ஜஸ்டிஸ்' கட்சியின் பெருந்தலைவரும், இராஜ தந்திரத்தில் தலைசிறந்தவரெனப் பேர்பெற்றவரும், எனது கெழுதகை நண்பருள் ஒருவருமாகிய **பனகால் ராஜா அவர்கள்**, என்னைப் பார்த்து, 'உங்களுக்கு எங்கள் அரசியல் பிடிப்பதில்லை; உங்கள் சமூக சீர்திருத்தம் எங்களுக்குப் பிடிக்கிறது. இது சன்மார்க்க மகா நாட்டில் நன்கு விளங்கிவிட்டது. ஆகவே, சமூக சீர்திருத்தத்தில் நாம் அனைவரும் ஏன் ஒன்றுசேர்ந்து உழைத்தல் கூடாது?' என்று கேட்டார்கள். 'அப்படியே செய்யலாம்' என்று புன்முறுவலுடன் கூறி, யான் விடை பெற்றுத் திரும்பினேன்.

சில திங்கள் கழிந்தன. நண்பர் நாயக்கரது 'குடியரசு' பத்திரிகையினின்றும் புதுப்புதுப் பாணங்கள் கிளம்பின. அப் பாணங்கள் எனக்கென்றே செப்பஞ் செய்யப்பட்டனவோ என்று யான் ஐயுற்றேன்; அவ்வாறே உலகமும் ஐயுற்றது. கடவுளைப் பற்றியும், அடியார்களைப் பற்றியும் யான் மாறுபடும் முறையில் '**சுயமரியாதை**' என்னும் பெயரால் 'குடியர'சில் பாணங்கள் பூட்டப்பட்டன. அப் பாணங்களால், சன்மார்க்க மகா நாடு கொண்ட சமூக சீர்திருத்த முறை

களைப் பரப்புதற்கு 'நண்பர் நாயக்கருடன் கலந்து தொண்டு செய்தல் வேண்டும்' என்று யான் கொண்ட எண்ணம் பாழாயிற்று.

சமூக சீர்திருத்தத்தில் நாயக்கருக்கும் எனக்கும் கருத்து வேற்றுமை இல்லையாயினும், கடவுள் நெறியில் அவருக்கும் எனக்கும் கருத்து வேற்றுமை எற்பட்டது. அவ்வேற்றுமை நாளுக்குநாள் பெருகலாயிற்று. அப்பெருக்கால் தமிழ்நாட்டில் பெரும் புயற்காற்றும் வீசிற்று. பின்னே நாளடைவில், 'சுய மரியாதை' என்னும் பெயர், ஓர் இயக்கமாகப் பரிணமித்தது. இவ்வியக்கம் தோன்றுதற்குக் காரணமாக நின்றது, மாயவரத்திற் கூடிய சமரச சன்மார்க்க மகா நாடாகலான், அதைப் பற்றி இம்முன்னுரையில் பிரஸ்தாபித்தல் நேர்ந்தது.

நண்பர் நாயக்கர் முயற்சியும், எனது தலைமைக் கூட்டுறவும் ஒன்றிய சன்மார்க்க மகா நாட்டின் பயனாகச் 'சுயமரியாதை இயக்கம்' என்னுங் குழவி பிறந்தமையால், அதற்குத் தந்தை நாயக்கரென்றும், தாய் யான் என்றும், அக்குழவி தந்தைவழி வளர்ந்து வருகிறது என்றும் யான் விளையாட்டாகச் சொல்வது வழக்கம்.

மாயவரத்திற் கூடிய சமரச சன்மார்க்க மகா நாட்டுத் தலைமை உரை, எனது தலைமை உரைகள் சிலவற்றைக் கொண்ட '**தமிழ்த் தென்றல்**' என்னும் நூலில் முதற்கண் ஒளிர்வது. அதனைத் தனி நூலாகவும் வெளியிடுதல் வேண்டும் என்று சில நண்பர் விழைந்தனர். அவர் விழைந்தவாறு, அத் தலைமை உரையை இச்சிறு நூலாக்கி, இம் முன்னுரையுடன் வெளியிடலானேன். நூலின் உள்ளுறைக் கேற்பச் '**சமரச தீபம்**' என்னும் பெயர் நூலுக்குச் சூட்டப்பட்டது.

இந்நூற்கண், சமரசம், சன்மார்க்கம், சீர்திருத்தம் முதலியன சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. '**சன் மார்க்க போதம்**' என்னும் தலைப்புக்கொண்ட வேறொரு நூல் என்னால் இயற்றப்பட்டிருக்கிறது. அதன்கண், சன்மார்க்க விளக்கம், சமரச நுட்பம், சத்தின் இயல், இயற்கைக் கூறுபாடு,

கண்மூடி வழக்க ஒழுக்க இழிவு, சீர்திருத்தம், சமதர்மம், சங்க அமைப்பு முதலியன விளக்கமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டிருக்கின்றன. சமரச சன்மார்க்கத்தைப் பற்றிய விரிவை அந்நூலிற் காண்க.

இராயப்பேட்டை
26—1—1934

திருவாரூர் - வி. கலியாணசுந்தரன்

UNIVERSITY LIBRARY
MADURAI

# சமரச தீபம்

சாதிநிற மொழிநாடு சமயவெறிச்
சண்டையெலாந் தாண்டித் தாண்டி
நீதியிலே விளங்குகின்ற நின்மலமாய்
நித்தியமாய் நிறையாய் அந்தம்
ஆதிநடு வில்லாத அகண்டிதமாய்
ஆனந்த அறிவாய் நின்று
போதலொடு வரவற்ற பூரணமே
சுதந்திரமே போற்றி போற்றி.—திரு. வி. க.

சகோதரிகளே! சகோதரர்களே!

இச்சமரச மகாநாடு ஈண்டுக் கூடுமாறு முயன்று உழைத்த கெழுதகை நண்பர்கட்கும், உழுவலன்பர்கட்கும் எனது நன்றியறிதலைச் செலுத்துகிறேன். இம்மகா நாட்டில் தலைமை ஏற்றுக் கடனாற்றும் பேற்றைச் சிறியேற்கு நல்கிய உங்கட்கும் எனது வணக்கம் உரியதாக.

இவ்வூழி, மகாநாட்டு ஊழி என்று கூறல் மிகையாகாது. இந்நாளில் உலகில் பலதிற மகாநாடுகள் கூடுகின்றன. அவற்றினிடையே ஒரு பாங்கர் இச்சிறு மகாநாடுங் குழுமியிருக்கிறது. 'இக்கூட்டம் பயனற்றது' என்று கருதுவோருமுளர்; 'இது பித்தர் ஈட்டம்' என்று எள்ளி நகையாடுவோருமுளர்; இன்னும் வேறு வேறு வழியில் இதைக் குறை கூறுவோருமுளர். இவர் அனைவர்க்கும் இம்மகாநாட்டின் இன்றியமையாமை

நாளடைவில் புலனாதல் ஒருதலை. பல்லாற்றானும் உலகை அலைத்துவரும் மறத்துறைகளை வீழ்த்தி, அறத்துறைகளை நிலைபெறுத்தவல்லது சமரச சன்மார்க்கம் ஒன்றே என்று உலகம் உணருநாள் சேய்மையில் இல்லை.

சமரச சன்மார்க்கத்துக்குரிய ஒரு சில நோக்கங்களைக் குறிக்கொண்டு, ஈண்டியுள்ள இம்மகாநாட்டில், சமரச சன்மார்க்கத்தின் பெற்றியை விரித்துரைத்தல் அநாவசியம். ஆயினும், அது குறித்துச் சில உரை பகர்ந்து மேலே செல்கிறேன்.

### சமரச சன்மார்க்கம்

சமரசம் யாண்டுளதோ ஆண்டுச் சன்மார்க்கமும் உண்டு; சன்மார்க்கம் யாண்டுளதோ ஆண்டுச் சமரசமும் உண்டு. ஆகவே, சமரசத்தைச் சன்மார்க்கமென்றும், சன்மார்க்கத்தைச் சமரசமென்றுங் கொள்ளலாம்.

உலகிலுள்ள பன்மார்க்கங்கள் சமரசங் கூட்டாமையானும், சன்மார்க்கம் ஒன்றே சமரசங் கூட்டுதலானும், உலகம் சன்மார்க்கத்தைச், 'சமரச சன்மார்க்கம்' என்று வழங்கி வருகிறது. சன்மார்க்கத்தில் சமரசம் பொலிதலால், அதனைச் 'சமரசம்' என்னும் அடையின்றிச் 'சன்மார்க்கம்' என்று கொள்வது சாலும்; சமரச சன்மார்க்கம் என்று விளக்கமாகக் கோடலும் பொருந்தும்.

'உலகம் பலவிதம்' என்பது பழமொழி. பல திறப்பட்ட உலகில் சமரசம் எங்ஙனம் நிலவும் என்று சிலர் கருதலாம். 'உலகம் பலவிதம்' என்பது எவரும் அறிந்ததொன்று.

பன்மையில் ஒருமை

ஆனால், அப்பன்மை, ஒருமைச் சமரசத்தைக் கூட்டாது என்று கோடல் தவறு. உலகையும்

உலகிலுள்ள பல பொருள்களையும் உற்று நோக்குழிப் பன்மை வழி, ஒருமை நிலவலையே, அவை அறிவுறுத்தல் காணலாம். நமது யாக்கையை எடுத்துக்கொள்வோம். பல உறுப்புக்கள் சேர்ந்த ஒன்றே யாக்கை என்பது. பன்மை உறுப்புக்களிடை ஒருமை யாக்கை ஒளிர்தல் கருதற்பாலது. பல செடி கொடி மரம் முதலியவற்றால் ஆக்கப்பட்ட ஒன்று, காடு என்று வழங்கப்படுகிறது. எனவே, பன்மையில் ஒருமை மிளிர்தலே நியதி என்க. அவ்வொருமை தேறாது, பன்மையில் மட்டும் பார்வை செலுத்தல் இடர் விளைக்கும். ஆதலால், பன்மையில் ஒருமை காண்டலே அறிவுடைமை.

உலகை உற்று நோக்குவோம். உலகம், நாடு, மொழி, இனம் முதலியவற்றால் ஆக்கப்பட்டிருத்தலைக் காண்கிறோம். நாடு, மொழி, இனம் முதலிய பன்மைகளில்மட்டும் கருத்தைப் பதித்து, அதனதன் அளவில் சமரசங்கொண்டு, மக்கள் வாழ்வு நடாத்தப் புகுங்கால், பொறாமையும் போரும் பிணக்கும் நிகழ்கின்றன.

நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமைகள் இல்லா தொழியுமோ ? ஒருபோதும் அவை யில்லாதொழியா. அவை யாவும் இயற்கையில் அமைந்திருப்பன. அவை எங்ஙனம் ஒழியும் ?

வேற்றுமையுள்ள மட்டும் பொறாமை, போர், பிணக்கு நிகழல் இயல்பு என்று சிலர் முடிவு காண்கிறார். அம்முடிவு பொருந்திய தொன்றன்று. யாக்கையில் உறுப்பு வேற்றுமைகள் இருக்கின்றன. இவ்வேற்றுமை கொண்டு, உறுப்புக்கள் ஒன்றோடொன்று பிணங்கின், யாக்கை நிலை என்னாம் ? யாக்கையின் நலனுக்கு உறுப்புக்

கள் யாவும் ஒன்றி உழைக்கின்றன. ஒன்றிய உழைப்பால் உறுப்புக்களும் நலனுறுகின்றன.

நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமைகொண்டு, மக்கள் ஒருவரோடொருவர் பிணங்கிப் போரிடுவரேல், உலகில் அமைதி நிலவாது. அமைதியின்மை, பிணங்கிப் போரிடும் மக்கட்கும் இன்பமூட்டாது. மக்கள் பிணங்கிப் போரிடாது ஒன்றி வாழ்வரேல், அவர்களிடை இசைந்த இன்பம் செறியும்.

மக்கள் வாழ்வின் நோக்கம் என்னை? இன்பம் நுகர்வதன்றோ? வீண் போராலும் பிணக்காலும் எற்றுக்கோ பெறற்கரிய இன்பத்தை அருமை மக்கள் இழத்தல் வேண்டும்? வேற்றுமைகளினிடையே ஒற்றுமை காணின் இன்பம் நுகரலாம். ஒற்றுமையுணர்வு, வேறுபாடுகளால் போரையும் பிணக்கையும் உண்டுபண்ணாது; அவைகளினிடை அன்பும் ஆர்வமும் உண்டுபண்ணும். ஆதலால், வேற்றுமையில் ஒற்றுமை காணவே மக்கள் முயலல் வேண்டும்.

ஒற்றுமையுணர்வை உலகிற் கூட்டவே பல பெரியோர் ஆங்காங்கே தோன்றிச் சன்மார்க்க போதனை செய்தனர். சன்மார்க்கம் என்பது, சத்தெனுஞ் செம்பொருளை யுணர்த்தும் மார்க்கமாகும். சத் - உண்மை அல்லது கடவுள்; மார்க்கம் - நெறி.

சத் மார்க்கம்

உண்மைநெறி அல்லது கடவுள்நெறியே சன்மார்க்கமென்பது. இச்சன்மார்க்கமே உலகில் சமயம் என்னும் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமைகளில் நிலைபேருக நின்று, வேற்றுமையுணர்வில் பழுத்த மக்கள், சன்மார்க்க

மெனுஞ் சமயத்தையும் கூறிட்டு, வேறுபடுத்திப் போர் களைக் கிளப்பினர்கள்.

உலகிலுள்ள சமயங்கள் யாவும் சத்தெனுஞ் செம் பொருள் ஒன்றையே குறிக்கொண்டு நிற்கின்றன. அவ் வந்நாட்டார், தத்தம் மொழியில் கடவுளைப் பல பெயரால் போற்றுகிறார். அப்போற்றலில் மொழி வேற்றுமை யன்றிப் பொருள் வேற்றுமை யில்லை.

ஒரே கடவுள்

ஆங்காங்குத் தோன்றிய அருளாளர் அறிவுறுத்திய சத் மார்க்கம், பின்னை நாளில் அவரவர் பெயரால் பலப்பல சமயங்களாக வழங்கப்பட்டது. அப் பெயர் வேற்றுமைகள் உலகில் சமயப் போர்களாக முடிந் திருக்கின்றன. நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமை களுள் சமயமும் ஒன்றாகக் கொள்ளப்பட்டது. மக்கள் அறியாமையால், பல சமயங்களைக் கற்பித்துக்கொண் டாலும், அச்சமயங்களின் உள்ளக்கிடக்கை ஒரு பொரு ளையே பற்றி நிற்றல் வெள்ளிடைமலை. இது குறித்து, 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னும் நூலின் இறுதியில் சிறிது விரித்துக் கூறியுள்ளேன். விரிவு ஆண்டுக் காண்க. *போதிய ஓய்வு கிடைப்பின் சன்மார்க் கத்தைப்பற்றி விரிந்த தனி நூலும் ஒன்று எழுத எண்ணி யிருக்கிறேன்.

எந்நாட்டாரும், எம்மொழியினரும், எவ்வினத்தா ரும், எல்லாரும் சத்தெனுஞ் செம்பொருளாம் ஒரு கட வுளையே பல்வேறு பெயரால் போற்றுகிறார். நாடு, மொழி, இனம் முதலியவாற்றான் வேறுபட்டார்போல வாழும் மக்களை, ஒற்றுமைப்படுத்தவல்லது, சத்துக்குரிய மார்க்கம்

---

* ஈண்டுக் குறிக்கப்பெற்ற நூல் பின்னே எழுதப்பட்டது. அதன் பெயர் 'சன்மார்க்க போதமும் திறவும்' என்பது.

ஒன்றே என்று அறுதியிட்டுக் கூறலாம். ஆதலால், நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமைகளில் ஒற்றுமை கண்டு, இன்பம் நுகர்தற்கு, மக்கள் சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுகல் வேண்டும். அவ்வொழுக்கத்தான் ஒருமை இன்பம் நுகரலாம்.

## சத்தும் மார்க்கமும்

**சத் விளக்கம்**

சத்தெனுஞ் செம்பொருள் தோற்றக் கேடுகளின்றி, என்றும் ஒரு பெற்றியா யிருப்பது ; எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது. அதற்கு உடலில்லை ; உறுப்பில்லை. அது மாற்ற மனங்கடந்து நிற்பது ; சொலற்கரிய சூழலுடையது ; எல்லாமாய் அல்லவுமாய் விளங்குவது ; எல்லாவற்றையும் இயக்குவது. அஃதின்றி ஓரணுவும் அசையாது. அத்தகைய ஒன்றன் உண்மையை எங்ஙனம் உணர்வது ?

**சத்தும் இயற்கையும்**

கண்ணுக்குப் புலனாகும் இயற்கை வடிவங்களின் வாயிலாகவே பரம்பொருளின் இருப்பை உணரல்வேண்டும். இயற்கையை ஆராய ஆராயச் சத்தெனுஞ் செம்பொருளின் உண்மை புலனாகும். ஊர் பேர் ஒன்றுமில்லா ஒன்றன் இருப்பை உணர்த்துங் கருவி, இயற்கை என்று சுருங்கச் சொல்லலாம். இயற்கையின் வாயிலாகவே சத்தெனுஞ் செம்பொருள் தன் அருட்டொண்டை நிகழ்த்தி வருகிறது. ஆகவே, சத்தை உணர்த்தும் மார்க்கம், இயற்கை இயற்கை என்பது கருதற்பாலது. சத்தெனுஞ் செம்பொருட்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பை என்னென்று கூறுவது ? அதை எழுத்தால் எழுதல் முடியுங்கொல் ! சத்தெனுஞ் செம்பொருளாகிய இறைவனை என்

அப்பன் என்றும், இயற்கையை என் அன்னை என்றும் யான் கொள்கிறேன்.

இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தல் இறைநெறி நிற்பதாகும். இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தாது,

செயற்கைச் சேறு

செயற்கைச் சேற்றில் வீழ்வது, இறைநெறி நிற்பதாகாது. இயற்கையோடியைந்து நிற்குமாறு படைக்கப்பட்ட மகன், நெறியல்லா நெறியாகிய செயற்கையில் வீழ்ந்து கிடத்தலால், அவன், தான் பிறந்த நாடு, தான் பேசும் மொழி, தனக்குரிய இனம் முதலிய கட்டுப்பட்ட சிலவற்றைக் கடவுளாக்கொண்டு, மற்ற நாடு மொழி இனம் முதலியவற்றோடு பிணங்கி, இடரிழைத்து வருகிறான். ஒருவன், தான் பிறந்த நாடு மொழி இனம் முதலியவற்றில் சத்தெனும் செம்பொருளிருப்பதுபோல, மற்ற நாடு மொழி இனம் முதலியவற்றிலும் அப்பொருளிருத்தலை உணராமையால், அவன் வேற்றுமை உணர்வால் இடர்ப்படுகிறான். யாண்டுஞ் செம்பொருளுண்மையை உணர்வனேல், அவன் இடர்ப்படாது இன்பம் நுகர்வன்.

சத்தெனுஞ் செம்பொருள் என்றும் ஒரு பெற்றியாய்த் திரிபு முதலிய மாறுபாடின்றியிருப்பினும், அதனை

இறையின் ஒருமையும், இயற்கையின் பன்மைக்கோலமும்

யுணர்த்துங் கருவியாயுள்ள இயற்கை, பல்வேறு வடிவாகப் பரிணமித்துக் காட்சியளிக்கிறது. பல நாடுகள், பல மொழிகள், பல வழக்க ஒழுக்கங்கள் முதலிய யாவும் இயற்கை அன்னையின் திருவிளையாடல்கள். பன்னாடு பன்மொழி முதலியன

இயற்கை அமைப்புக்கள். இயற்கையோடியைந்த வாழ்வு செலுத்துவோர்க்குப் பன்மை வடிவங்களின் பெருமை புலனாகும்.

பன்மையின் மாண்பு

'இயற்கை அன்னை பன்மை வடிவங்களாக ஏன் காட்சியளிக்கிறாள்? அதனாலன்றோ உலகில் போரும் பிணக்கும் எழுகின்றன ?' என்று சிலர் ஐயுறலாம். பன்மை இல்லையேல் உலகம் நடைபெறாது; மனிதன் கை கால் உறுப்புக்களின்றித் திண்மையாக ஒரே பிண்டமாகப் பிறப்பனேல், அவனால் என் செய்தல் இயலும் ? இங்ஙனே பிறவும். மனிதனது ஒவ்வோர் உறுப்பும் தன் தன் கடனாற்றித், தனக்கும், தன்னையுடைய முதலுக்கும் இன்பூட்டுவதுபோல, அவ்வந் நாட்டினரும், மொழியினரும், பிறரும் தத்தங் கடனாற்றித் தமக்கும் உலகிற்கும் இன்பூட்டல்வேண்டும். இதற்கு ஒருமையுணர்வு வேண்டற்பாலது என்று மீண்டும் நினைவூட்டுகிறேன்.

இயற்கைவழி நிற்றல்

எவரெவரை இயற்கை எங்கெங்கே பிறப்பிக்கிறதோ, அவரவர் ஆங்காங்கே உள்ள வழக்க ஒழுக்கங்கட்கு இயைந்த வாழ்வு நடாத்துவது, இயற்கை அன்னையை வழிபடுவதாகும். ஆங்காங்குள்ள தட்ப வெட்ப நிலைக்கேற்றவண்ணம், இயற்கை அன்னை, மொழி, நாடு, பொருள் முதலியவற்றை வழங்கி இருக்கிறாள். அவ்வளவில் உள்ள நிறைகொண்டு வாழ்வது இயற்கை வாழ்வாகும். நிறைகொள்ளாது பேராசையால் மற்ற நாடுகளையும் பொருள்களையும் பற்றி வாழவிரும்புவது செயற்கை வாழ்வாகும். இதனால் இயற்கைக்கு மாறுபட்ட வினைகள் நிகழ்கின்றன. அவ்வினைகளால் ஏற்றத் தாழ்வும், அடக்கு

முறையும், பிற கொடுமைகளும் உலகிடை நுழைந்து துன்புறுத்துகின்றன; உலகில் இன்ப நுகர்ச்சியும் இல்லா தொழிகிறது. இப்பொழுது உலகம் எந்நிலையிலிருக்கிறது? செயற்கை வெம்மையில் வீழ்ந்து எரிந்துகொண்டிருக்கிறது. இது நிற்க.

## வாழ்வு

வெறும் இயற்கை வாழ்வு என்றால் ஒழுங்குமுறை இல்லாததா என்று சிலர் கடாவுவர். வாழ்வை அளித்த இயற்கை அன்னை, ஒழுங்கு முறைகளை வகுக்காதொழிவளோ? இயற்கையில் உலக நடைமுறைக்கெனச் சில வாழ்வு முறைகள் கோலப்பட்டிருக்கின்றன. வாழ்வு என்பது இரு திறத்தது. ஒன்று உடல் வாழ்வு; மற்றொன்று உயிர்வாழ்வு. உடல்வாழ்வு உலகியலைப் பற்றிநிற்பது; உயிர்வாழ்வு கடவுளைப் பற்றிநிற்பது. இவ்விரண்டிற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. உயிர்வாழ்விற்கென்றே உடல்வாழ்வு ஏற்பட்டது. உடல்வாழ்வின்றி உயிர்வாழ்வு நலம்பெறல் அரிது. எனவே, கடவுள் நெறிக்கு உலகியல் இன்றியமையாததென்க.

உடலும் உயிரும்

உலகியல் நடைமுறைக்கென நான்கு துறைகளும், கடவுள் நெறிக்கென நான்கு துறைகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்நான்கில் எல்லாத் துறைகளும் அடங்கலால், பிறவற்றை விரித்துக் கூறவேண்டுவதில்லை. உலகியல் செவ்வனே நடைபெறற் பொருட்டு, மக்கள், தொழிலாளர் என்றும், வாணிபர் என்றும், அரசினர் என்

நான்கு துறைகள்

றும், பார்ப்பனர் என்றும் பிரிந்து கடனாற்றி வரலானார்கள். இப்பிரிவு இயற்கையின்பாற்பட்டது. மக்கள் அனைவரும் ஒரே கடனாற்றப் புகுவரேல், உலகம் நடைபெறாது. ஆதலால், பிரிவு இன்றியமையாதது. இம்முறைவழி உலகம் இயங்கி வருகிறது. எங்குத் தொழிலாளரில்லை? எங்கு வாணிபரில்லை? எங்கு அரசினரில்லை? எங்கு ஆசிரியரென்னும் பார்ப்பனரில்லை? அவ்வத் தொழிலாளர் யாண்டும் உளர். இஃது உலகியல் முறை.

உயிர் வாழ்விற்கும் நான்கு துறைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவை: உலகு உயிர் கடவுள் முதலியவற்றை அறிவுறுத்துங் கல்வி ஒன்று; கற்றதை நிகழ்ச்சியில் கூட்டவல்ல இல்வாழ்வு மற்றொன்று; இல்வாழ்வால் பெறும் அன்பால் மனைவியுடன் உயிர்களுக்குதவும் அறம் வளர்ப்பது இன்னொன்று; அதன்வழி அழுக்காறு அவா வெகுளி முதலிய மாசுகளினின்றும் விடுதலையடைந்து, எவ்வுயிரினும் சத்தெனும் செம்பொருள் பொலிவது கண்டு, உயிர்கட்குச் செந்தண்மைபூண்டொழுகும் முடிந்தநிலை எய்துவது வேறொன்று. இந்நான்கும் மக்கட்கு வேண்டற்பாலன. இவையாவும் உலகில் இயங்கி வருகின்றன. எந்நாட்டில் மாணாக்கரில்லை? எந்நாட்டில் இல்வாழ்வோரில்லை? எந்நாட்டில் அறவோரில்லை? எந்நாட்டில் துறவோரில்லை?

இவ்விரு முறைகளின் வழி, வாழ்வு நடாத்துவது இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்துவதாகும்; அதாவது சன்மார்க்கத்தில் நிற்பதாகும்.

## நமது நாடு

நமது நாட்டில் உலகியற்றுறைகளும், உயிரியற்றுறைகளும் செம்மை நெறியில் இயங்கு முறையில் மக்கள் இயற்கை வாழ்வு நடாத்தி வந்தார்கள். வந்த நாளில், நாடு செழுமையுற்றிருந்தது. அந்நாளில் தோன்றிய கலைகளின் பெருக்கை என்னென்பேன்! வீரர்களின் பெருக்கை என்னென்பேன்! அறப் பெருக்கை என்னென்பேன்! அப்பொழுது, நமது பாரத அன்னை முடியணிந்து, கலையணிந்து, செங்கோலோச்சி, அரியாசனத்தில் வீற்றிருந்தாள்; அரசியல் குடியியல் அழகோடியங்கின; அன்பும் அருளும் ஆறாக ஓடின; எங்கணும் இன்ப வாழ்வு! எங்கணும் இயற்கையறம்! எங்கணும் சன்மார்க்கம்!

பண்டை இந்தியா

பின்னை, நாளடைவில், பாரத மாதாவின் முடியும் கலையும் செழுமையும் கொழுமையும் வளனும் நலனும் பிறவும் மெல்ல மெல்ல நெகிழ்ந்து நெகிழ்ந்து சுருங்கிச் சுருங்கி இறுகலாயின. இந்நாளில் பாரதத்தாய் அடிமைக் குழியில் வீழ்ந்து கிடக்கிறாள். இச்சிறுமைக்குக் காரணம் என்னை?

வாழ்விற்கென ஏற்பட்ட தொழிலின் முறைகளை நடாத்திவந்த மக்களுக்குள், பிறப்பில் ஏற்றத் தாழ்வு புகுந்தமையே சிறுமைக்குச் சிறந்த காரணமாகும். தொழிற் பிரிவுகள் பிறப்புப் பிரிவுகளாக மாறின. பிறப்புவழி ஏற்பட்ட பிரிவுகள், இயற்கைக்கு மாறுபட்டனவாகலான், அந்நாள்தொட்டு, மக்கள் சன்மார்க்க

இந்தியாவின் வீழ்ச்சிக்குக் காரணம்

மெனும் இயற்கை வாழ்வினின்றும் பிறழ்ந்து, துன் மார்க்கமெனுஞ் செயற்கை வாழ்வில் வீழலானார்கள். இப் பிறழ்ச்சியால், பார்ப்பனன் பிள்ளை பார்ப்பனனாகவும், அரசன் பிள்ளை அரசனாகவும், வாணிபன் பிள்ளை வாணிப னாகவும், தொழிலாளன் பிள்ளை தொழிலாளனாகவும் கரு தப்பட்டனர்.

பௌத்தமும் பார்ப்பனமும்

ஆசிரியத் தொழில் பூண்டிருந்தோர், அரசர்களைத் தம் வயப்படுத்தித், தம்வழி உலகம் இயங்கவேண்டுமென் னும் எண்ணங்கொண்டு முயன்று வந்த வேளையில், இடபதேவர், மஹா வீரர், புத்தர் முதலிய அருளாளர் கிளம்பிப், பிறப்பால் வகுப்பு வேற்றுமை கூடாது என்று எதிர்த்து வந்தனர். அம்முயற்சியில் புத்தர் பெருமான் வெற்றியும் பெற்றார். மீண்டும் நாடு சன்மார்க்கமெனும் இயற்கை அறநெறியில் இயங்கலாயிற்று. அவ்வியக்கத்தை ஓங்க விடாது, பார்ப்பனர் சிறு முயற்சியால் தகைந்துவந்தனர். நாளுக்குநாள் புத்தர்பெருமான் அறவுரை ஆக்கம்பெற்று வருவது கண்ட பார்ப்பனத் தலைவர் சிலர், பௌத்த சமயம் புகுந்து, பௌத்த சமய ஆக்கத்தையே மாய்த்த னர். அன்று மீண்டும் எழுந்த பார்ப்பனர், பின்னைநாளில் தமக்கு எத்தகை இடையூறும் நேராதவாறு, எவ்வெக் கோட்டைகள் கட்டவேண்டுமோ, அவ்வக் கோட்டைகள் கட்டிக்கொண்டனர். பௌத்த மதக் கிளர்ச்சி தோன்றா திருக்குமேல், பார்ப்பனர் தமது நலன் கருதி, இத்துணை அரண்கள் கோலி இருக்கமாட்டார். அச்சமேலீட்டான், அவர் இயற்கைக்கு மாறுபட்ட பல துறைகள் வகுத்தனர் பாவம் !

முதல் முதல் பெண்மக்களும், தொழிலாளரும் கல்வி கற்றலாகாது என்னும் சட்டம் பார்ப்பனரால் செய்யப்பட்டது. கல்வி இல்லா மக்கள் விலங்காதல் இயல்பன்றோ? பெண்மக்கள் அருள்பூத்த நெஞ்சினராகலான், தங் (பார்ப்பனர்) கொடுமை கண்டு பொறுது அறக்கிளர்ச்சிக்குத் துணை நிற்பரெனக் கருதி, அவர்கட்கு (பெண் மக்கட்கு)க் கல்வி மறுக்கப்பட்டது. வேத காலத்தில் பெண்மக்கள் பலர் பெரும் பண்டிதைமாராக இருந்தனர். ஸ்மிருதியில் பெண்கல்வி மறுப்புக் காணப்படுகிறது. ஸ்மிருதிகள் புத்தர் காலத்திற்குப் பின்னரே எழுதப்பட்டன. இதனால் வேண்டுமென்றே பெண்கல்வி மறுக்கப் பட்டது நோக்கத்தக்கது.

பெண் மக்களும் கல்வியும்

தொழிலாளர் தொகையில் பெரும்பான்மையோராக இருத்தலான், அவர் கற்றவராயிருப்பின், புத்தர் அறக் கிளர்ச்சி போன்றதொரு கிளர்ச்சி எழுமேல், அதற்கு அவர் துணைபுரிவரென் றஞ்சி, அவர் கல்வி கற்றலாகாது என்னும் விதி செய்யப்பட்டது. பின்னும் நாளடைவில் மேல் வகுப்பார் தம்மைக் கடவுளர் என்று மற்ற வகுப்பார் கருதித் தமக்கு ஏவல் செய்யுமாறு பல விதிகள் நிறுவினர். உயர் வகுப்பார் பிறப்புரிமை, பழைய நூல்களினிடையே செருகப்பட்டது. பிறப்புரிமைக் காப்புக்கெனக் கோயில்கள் மடங்கள் கட்டப்பட்டன. உயர் வகுப்பார்க்குள்ள உரிமைகளையும், மற்றவர்க்குள்ள சிறுமைகளையும் ஸ்மிருதிகளில் இன்னுங் காணலாம்.

தொழிலாளரும் கல்வியும்

இக்கொடுஞ் சட்டங்கள் நந் தமிழ்நாட்டில் தலை காட்டியபோது, அப்பொழுது தமிழ் நாட்டில் வதிந்த

திருவள்ளுவர் முதலியோர், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா - செய்தொழில் வேற்றுமை யான்' என்று பிறப்புரிமைக் கொடுமையைக் கடிந்தனர். எவர் கடிந்தும், பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் முறை யாண்டும் பரவலாயிற்று. நாட்டின் பெரும்பான்மையோர், கல்வி பெறாமையால் அம்முறைக்கு அடிமையாயினர். என் செய்வது ?

இயற்கை நெறிக்கு மாறுபட்டுப் பிறப்பில் உயர்வு தாழ்வு கொண்ட செயற்கை வாழ்வு நாட்டில் நடந்து வந்தது. சன்மார்க்கம் ஒழிந்து, சாதிமார்க்கம் எழுந்தது. செயற்கை முறையால் விளைந்ததென்னை ? நாடு எல்லா நலன்களையும் இழந்து, அடிமைக் குழியில் வீழ்ந்த தொன்றே விளைந்த பயன்.

**சாதி**

நான்குவிதத் தொழில்கட்கும் நான்குவிதச் சாதி யிருத்தல்வேண்டுமென்றும், இல்லையேல் உலகம் நடை பெறாதென்றும் சிலர் வாதமிடுகிறார். மக்கள் பிரிந்து, நான்குவிதத் தொழிலையும் நிகழ்த்தவேண்டுமென்பதை யான் மறுக்கின்றேனில்லை. அப்பிரிவு, பிறப்புவழியில் இருத்தல் இயற்கைக்கு மாறுபாடு என்பது எனது உள்ளக்கிடக்கை. உலகில் எங்கணும் நான்குவித முறைகளிருக்கின்றன. ஆனால் யாண்டாதல் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதப்படுதலுண்டோ ? சிறப்பில் உயர்வு தாழ்வு உறல் இயல்பு. இவ்விந்திய நாட்டில், ஹிந்துக்களிடை மட்டும், பிறப்பில் சாதி கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு கொள்ளாத நாடுகள் அழிந்து பட்டனவோ ? படுகின்றனவோ ? அவை யாவும் உரிமை இன்பத்தைச் செவ்வனே நுகர்ந்து

வருகின்றன. பிறப்பால் சாதிகொண்டு, உயர்வு தாழ்வு கணிக்கும் இந்தியாவோ அடிமைக் குழியில் வீழ்ந்து தவிக்கிறது.

நாளடைவில் நால்வகைச் சாதி, நாலுலட்சம் சாதிகளாய்விட்டன. சாதிக்குள் சாதியாகவும், கிளைக்குள் கிளையாகவும் சாதிக்குப்பைகள் பெருகிவிட்டன. திண்ணைக்கொரு சாதி, நடைக்கொரு சாதி, கூடத்துக்கொரு சாதி, மாடத்துக்கொரு சாதி, அறைக்கொரு சாதி, அடுப்புக்கொரு சாதி, கொல்லைக்கொரு சாதி, வீட்டுக்கொரு சாதி, தெருக்கொரு சாதி, கோயிலுக்கொரு சாதி, மடத்துக்கொரு சாதி, கடவுளுக்கொரு சாதி - எத்துணை எத்துணைச் சாதிகள்! நாடெங்கும் சாதிநாற்றமே வீசுகிறது.

மூன்றுபாவங்கள்

நம் நாட்டார் பெண்ணுரிமை கடிந்த தீவினையும், பிறப்பால் சாதி வகுத்த தீவினையும், மக்களுள் தீண்டாமை கொண்ட தீவினையும் இப்பொழுது மூண்டெரிந்து நாட்டை அரிக்கின்றன; எரிக்கின்றன. இயற்கைக்கு மாறுபட்டு நின்றதன் பயனை இப்பொழுது நாடு அனுபவித்து வருகிறது. கொடுமைகளைக் கண்டு இயற்கை அன்னை வாளா கிடப்பளோ? அவள் இப்பொழுது நாட்டை ஒறுத்து வருகிறாள்.

அன்பர்களே! நமது நாட்டுக்குள்ள சிறுமையைப் போல வேறு எந்நாட்டுக்கேனும் உண்டோ? நமது நாட்டு மக்கள் வயிறாரச் சோறு உண்கிறார்களா? அவர்கட்கு நல்லுடை உண்டா? நல்லுறக்கம் உண்டா? நமது நாட்டுக் கலைகள் எங்கே? தொழில்கள் எங்கே? எல்லாம் போயின. ஒரு சாண் வயிற்றிற்கு நம்மவர்

கடல் கடந்து ஓடி மானம் இழக்கின்றனர். இவ்வளவிற்குங் காரணமாக உள்ள தீவினைகளுக்குக் கழுவாய் தேடிக் குறைபாடுகளைக் களையவேண்டுவது நமது கடமையன்றோ ?

## நமது கடமை

முதலாவது நம் முன்னோர் செய்த தவறுதலுக்கு நாம் கழுவாய் தேடல்வேண்டும். கழுவாய் பிராமணர் மட்டும் தேடல்வேண்டும் என்னும் நியதி இல்லை. பிராமணரல்லாத மற்றவரும் கழுவாய் தேடக் கடமைப்படல் வேண்டும். பிராமணர் மற்றவரைச் சிறுமைப்படுத்துவதுபோல, மற்றச் சாதியாரும் ஒடுக்கப்பட்டவரைச் சிறுமைப்படுத்துகிறார். எல்லாரும் பெண்மக்களை வருத்துகிறார். ஆதலால், அனைவரும் தத்தங் குற்றமுணர்ந்து கழுவாய் தேடுவாராக.

கழுவாய்

ஹிந்துக்களென்று இந்நாளில் தங்களைக் கருதிக் கொள்வோர் அனைவரும், நாடோறும் காலை மாலை இரண்டு வேளைகளிலும் ஆண்டவனை நோக்கி, வழிவழி நிகழ்ந்துவரூஉம் குற்றங்களை மன்னிக்குமாறு கேட்பாராக ; கேட்குமளவோடு நில்லாது, திங்கட்கொருமுறை நோன்பும் இருப்பாராக ; இவ்வாறு உள்ளத்தைத் தூய்மைப்படுத்திப் படிப்படியாகச் சில திட்டங்களைக் கோலி, அவற்றைச் செயலில் நிகழ்த்த முயல்வாராக.

திட்டங்களை முறைமுறையாக ஈண்டுத் தொகுத்துக் கூறவேண்டுவதில்லை. சில குறிப்புக்களைமட்டும் நினைவூட்டுகிறேன்.

(க) பெண்ணுலகு :—பெண் ஒரு பாதி; ஆண் மற்றொரு பாதி. இரண்டுஞ் சேர்ந்த ஒன்றே முழு மனிதத் தன்மை. அங்ஙனமாக, வாழ்வின் ஒரு பாதி உரிமை கடிவது எத்தகை அறியாமை? உடலில் ஒரு பாதி குருதியோட்டம் குன்றினல் உடல் நிலை என்னுகும்? பாரத மாதாவின் ஒரு பாதியாகிய பெண்ணுலகின் உரிமை கெட்டமையால், அவள் பக்க வாயுவால் பீடிக்கப்பட்டுக் கிடக்கிருள். அந்நோய் நீங்கினலன்றி அவளுக்கு உய்வில்லை.

'ஒத்த பண்பும் ஒத்த நலனும் ஒத்த அன்பும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியுமுடைய ஒருவனும் ஒருத்தியும்.......' என்ருர் நக்கீரனுர். பெண்மகள் பண்டை நாளில் எல்லா வழியிலும் ஒத்து வாழும் உரிமை பெற்றிருந்தாள். அவ்வுரிமை இன்பத்தை மீண்டும் அவள் நுகருமாறு ஆண்மக்கள் நடந்துகொள்ளல் வேண்டும். பெண்ணுலகக் கேட்டால் ஆணுலகுக்கும், பின்னை நாட்டுக்குமே ஊறு விளைந்துள்ளதை அன்பர்கள் கருதுவார்களாக. தாய்மைக்குரிய பெண்ணின் சிறுமை, நாட்டின் சிறுமையாதல் இயல்பு. ஆதலால், பெண்ணலன் நாடவேண்டுவது நம் பெருங்கடமை.

பண்டை நாளில் ஆண்மகனேடு ஒத்த கல்வி பெற்றிருந்த பெண், இந்நாளில் அக்கல்வி ஏன் பெறுதல் கூடாது? நீண்ட நாளாக, நாட்டின் தாயாகிய பெண், கல்வி இழந்தமையால் நாட்டுக்கு விளைந்த கேடுகள் எண்ணில; எண்ணில.

ஆண்மகன் இரண்டு மூன்று பெண்களை மணஞ் செய்து கொள்வதும், பெண் மகள் உற்ற வயது

அடையா முன்னர் அவளைத் திருமணஞ்செய்து கொடுப்பதும், பெண்மகள் இளமையில் கைம்மை எய்தினல், வேறு களைகணின்றி, நரகிடை வீழ்ந்து வருந்துவதும், இன்னோரன்ன பிற நிகழ்ச்சிகளும் எத்தகைக் கொடுமைகள்! அன்பர்களே! உன்னுங்கள்.

வழுக்கி வீழ்ந்த சகோதரிகள் (Fallen Sisters) நிலையை நினைக்கும்போது கண்ணீர் பெருகுகிறது. எல்லாத் துறைகட்கும் சாதி ஏற்பட்டதுபோல, விபசாரத் துக்கெனவும் ஒரு சாதி நாட்டில் ஏற்பட்டிருக்கிறது! என்ன இழிவு! என்ன இழிவு! ஒருவன் ஒருத்தியுடனும், ஒருத்தி ஒருவனுடனும் வாழும் முறை ஏற்படல் வேண்டும்.

(உ) **பிறப்பால் சாதி**:—பிறப்பால் உயர்வு தாழ்வு பாராட்டல் தொலைதல் வேண்டும். சிறப்பால் உயர்வு தாழ்வு தோன்றல் இயல்பு. உயர்குலத்தில் பிறந்தவன், எத்தகைக் கயமைத்துறையில் இழிந்து விளையாடினும், அவனை உயர்ந்தவனாகக் கருதவேண்டுமென்னும் நியதி இயற்கைக்கு அரண் செய்வதன்று. ஒருவனுக்கு உயர் வளிப்பது ஒழுக்கமன்றிப் பிறப்பன்று. தொழில் முறை பற்றி எழுந்த பிரிவு, பிறப்பைப்பற்றி எழலாயிற்று. அதைக் குலைத்தல் வேண்டும். இப்பொழுது அஃது இயல்பில் குலைந்தே வருகிறது. இன்னும் விரைந்து அதைக் குலைக்க முயலல்வேண்டும். அதற்கெனச் சில முறைகளைக் கடைப்பிடித்தல் நலம்.

(அ) பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுவதைத் தொலைத்தல் வேண்டும்.

(ஆ) பிறப்பு வழி உயர்வு கருதி, எவரையும் ஆசிரியராகக் கோடலாகாது. கல்வி அறிவு ஒழுக்கம்

உடைய ஒருவன், எவனாயினும், அவனை ஆசிரியனாகக் கொள்ளும் பயிற்சி முதிரல் வேண்டும்.

(இ) பிறப்புரிமை வழி நிகழும் வினைகள், வழிபாடுகள் முதலியவற்றை ஒழித்தல் வேண்டும்.

(ஈ) பிறப்பால் உயர்வு கருதி, எவருக்கும் வந்தனை வழிபாடுகள் நிகழ்த்தலே கூடாது.

(ங) **தீண்டாமை விலக்கல்** :—மக்களுக்குள் தீண்டாமை வகுத்ததினுங் கொடுமை பிறிதொன்றில்லை. அஃதொரு பெருநோயாய்ப் பாரதமாதாவைப் பிணித்திருக்கிறது. சிலர், தமது நலங் கருதி ஒருபோழ்து கொண்ட முறைகள் இப்பொழுது நாட்டையே அரிக்கின்றன. தீண்டாமையால் நாட்டுக்கு நேர்ந்துள்ள இடுக்கண்களை உணர்ந்தும், இன்னும் நம்மவர் அந் நோயைப் போக்கிக்கொள்ள மனங்கொள்கிறாரில்லை.

தீண்டாமைக் குற்றம் பிராமணரிடத்தில் மட்டும் இல்லை ; பிராமணரல்லாதார்பாலும் அக்குற்றம் உண்டு. தீண்டாமையில் பிராமணரினும் பிடிவாதமாகச் சில பிராமணரல்லாதாரிருத்தல் எனக்குத் தெரியும்.

'பிராமணரல்லாதார் இயக்கம்' என்று ஒன்று தோன்றியிருக்கிறது. அதன் நோக்கம் என்னை ? பிறப்பில் உயர்வு தாழ்வு கருதாது, பிராமணரும் தாமும் எல்லா வழியிலும் ஒத்து வாழல் வேண்டுமென்பது. அது காரணமாகப் பலதிறப் பிணக்குகளும் நிகழ்ந்து வருகின்றன. பிராமணரல்லாதார், பிராமணருடன் சமத்துவம்பெற முயல்வது போற்றற்குரியதே. ஆனால், பிராமணருடன் போராடி, அவருடன் ஒத்து வாழ எண்ணும் பிராமணரல்லாதாருள் எத்துணைபேர்

பிராமணரல்லாதார் இயக்கம்

தீண்டாமை விலக்கை ஏற்றுக்கொள்பவர் ? அதற்கு உழைப்போர் எத்துணை பேர் ? ஒரு சிலர் இருக்கிறார். பெரும்பான்மையோர்க்குத் தீண்டாமை விலக்கில் கவலையுண்டா என்பதே எனது கேள்வி. 'பறையர், பறையர், தீண்டல் கூடாது' என்று ஒதுங்கிப் பார்ப்பனருடன் மட்டும் சமத்துவத்துக்குப் பார்ப்பனரல்லாதார் போராடினால், அப்போராட்டத்துக்கு இயற்கை அன்னை அருள் செய்வளோ ?

பிராமணரல்லாதார், பிராமணருடன் கலக்க முயல்வதுபோலத் தம்முடன் தீண்டாதார் என்று சொல்லப்படும் மக்கள் கலக்கப் பிராமணரல்லாதார் இடந்தரல் வேண்டும். அந்நல்லெண்ணம் பிராமணரல்லாதாரிடத்தில் வேரூன்றினால், அவர்தம் முயற்சிக்கு ஆண்டவன் துணை கிடைக்கும். தீண்டாமையைப் போக்கப் பிராமணரும், மற்றவரும், எல்லாரும் முயல்வாராக.

தீண்டாமை போக்க முன்னை நாளில் சில அன்பர் முயன்றனர் ; இந்நாளில் காந்தியடிகள் முயன்று வருகிறார். இப்பெரியோர்கள் சொல்வழி நின்று கடனாற்றச் சாதிக்கூட்டத்தார் ஒருப்படுகிறாரில்லை; ஆனால் அவர்களுடைய திருவுருவப் படங்களைப் பூசிக்கவும், அவைகட்குத் திருவிழாச் செய்யவும் ஒருப்படுகிறார். தீண்டாமையை விட்டொழிக்க நம்மவர் நடுக்குறுகிறார் !

போலிச் செயல்கள்

கோயில், குளம், தெரு முதலிய பொது இடங்களிலாதல் ஏழை மக்கட்கு உரிமையுண்டா ? இல்லையே ! தீண்டாமை யுள்ளமட்டும் நாட்டுக்கு உய்வில்லை என்பது ஒருதலை. வாய்ச் சீர்திருத்தம், வாய் வேதாந்தம்

முதலியவாற்றால் பயன் விளையாது. தீண்டாமை உன்னும் மனோநிலை மாறுதல் வேண்டும். சாதியுடையார், சாதியில்லாத ஆதிதிராவிடர் முதலியோரிடம் நன்றாகப் பழகல்வேண்டும். அப்பழக்கத்தால் வேற்றுமை யொழியும். சாதியில்லாத ஆதிதிராவிடர்களிற் கல்வி அறிவு ஒழுக்கமுடையாரைக் கொண்டு, சில தெய்வ வினைகளும் நிகழ்வித்தல் வேண்டும்.

**கோயில்கள்** :—சத்தெனுஞ் செம்பொருளை உன்னுதற்கும், போற்றுதற்கும் உரிய இடமாகக் கோயில்கள் கட்டப்பட்டன. நாளடைவில் அக்கோயில்களிலும் சாதிப்பேய் நுழைந்துகொண்டது. ஒரு கூட்டத்தார் இங்கும், மற்றொரு கூட்டத்தார் உங்கும், இன்னொரு கூட்டத்தார் அங்கும் நின்று கடவுளை வழிபடல் வேண்டுமாம்! கடவுள் முன்னிலையிலுமா உயர்வு தாழ்வு! கடவுளை மரம் செடி கொடி பாம்பு சிலந்தி யானை முதலியன பூசித்தன என்று புராணங்கள் புகல்கின்றன. கடவுள் உருவங்கள்மீது ஈக்கள் மொய்க்கின்றன; பல்லிகள் ஓடுகின்றன. இவைகட்கெல்லாம் இறைவனைத் தொடும் உரிமை யிருக்கும்போது, ஆறறிவுடைய மக்களுக்கா அவ்வுரிமையில்லை? சாதியார் கொடுமை என்னே! என்னே!

கோயில்களை எப்படித் திருத்துவது? இரண்டு வழி குறிக்கலாம். ஒன்று, சாதிக்கோயில்களுக்குப் போகாமலிருப்பது; மற்றொன்று சத்தியாக்கிரகத்தால் மக்களுரிமையை நிலைநாட்டுவது.

**மடங்கள்** :—பௌத்த சமயத்துக்குப் பின்னரே மடங்கள் பெரிதும் ஏற்பட்டன. சமய ஞானத்தை

வளர்ப்பது மடங்களின் நோக்கம். ஒரு பற்றுமில்லாத 'சந்நியாசிகளே' மடாதிபதிகளாக அமர்கிறார்கள். அச் சந்நியாசிகளைத் தலைமைகொண்ட மடங்களிலும் சாதிப் பேய் புகுந்திருக்கிறது!

'மடங்களையும், மடாதிபதிகளையும் குறை கூற வேண்டும்' என்பது எனது நோக்கமன்று. நீண்டநாள் பழக்க ஒழுக்கத்துக்கு மடங்களும் மடாதிபதிகளும் அடிமைப்பட நேர்ந்திருப்ப தொன்றையே ஈண்டுக் குறிப்பிடுகிறேன். யாண்டாயினுமுள்ள ஒரு மடாதிபதி, நாட்டுநிலை சமயநிலை முதலியவற்றை எண்ணிச் சமரசத்தை வளர்க்கப் புறப்படுவரேல், அவரைத் தெய்வம்போல் போற்றுவேன். காலதேச வர்த்தமானத்துக்கேற்றவாறு முறைகளை மாற்றுவதால் தீங்கு நேரிடாது; நலனே உறும். மடங்களையும், மடாதிபதிகளையும் ஒழுங்குபடுத்தும் ஆற்றல் பொது மக்கட்கு உண்டு. சத்தியாக்கிரகம் சிறந்த கருவி என்று சொல்லவேண்டுவதில்லை.

## பிராமணர் பிராமணரல்லாதார்

இப்பொழுது தென்னாட்டில் பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்கு யாண்டும் இருத்தல் உண்மை. இப் பிணக்கு, தொடக்கத்தில் அரசியலை ஒட்டி எழுந்தது. இப்பொழுது அது சமூகத்தில் குடியேறிவிட்டது. அதனால் விளைந்துவரும் பயன் என்னை? பிராமணருக்குள் மிக உரமான ஒற்றுமை நிலவி வருகிறது. பிராமணர் மகாநாடுகள் ஆங்காங்கே கூடிவருகின்றன. சாதி வரம்பு கடந்து வாழ்வு நடாத்திய சில பிராமணரும் பழைய இருட்டில் புகலாயினர்.

பிராமணரல்லாதாருள் என்ன நிகழ்ந்து வருகிறது? பிராமணரல்லாதாருள் ஒவ்வொரு சாதியாரும் சாதி மகாநாடு கூட்டி வருகிறார். 'சாதி அழிவிற்காக இம்மகாநாடுகள் கூட்டப்படுகின்றன' என்று சிலர் சொல்கிறார். அந்நுட்பம் எனக்கு விளங்கவில்லை! பழையபடி சாதிகள் உரம்படுமென்று எனது சிற்றறிவிற்குத் தோன்றுகிறது. ஒவ்வொரு சாதியாரும் சட்டசபை இருக்கைகளில் இடம்பெறத் தீர்மானஞ் செய்வது என்ன காட்டுகிறது? ஆகவே, பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்கால் நாட்டில் ஒற்றுமை விளையாது, வேற்றுமை விளைந்து வரல் கண்கூடு.

சாதி மகாநாடுகள்

இஃது அரசியல் மகா நாடன்றாதலின், ஈண்டு அரசியல்துறை பற்றிப் பலபடக் கூற யான் விரும்புகிறேனில்லை. எடுத்த பொருளுக்கேற்ப இரண்டோர் உரை பகர விழைகிறேன்.

நமது நாட்டில் இருவினை நிகழல்வேண்டும். ஒன்று நாட்டு விடுதலை; மற்றொன்று நாட்டிலுள்ள குறைபாடுகளைக் களைந்து சமரசப்படுத்துவது. அதற்கோர் அமைப்புவேண்டும்; இதற்கோர் அமைப்பு வேண்டும். முன்னதற்குப் புதியதோர் அமைப்பு காண வேண்டுவதில்லை. காங்கரஸ் என்னும் பழைய அமைப்பு ஒன்றிருக்கிறது. அரசியல் விடுதலைப் போருக்கு அதைக் கருவியாகக் கொள்ளலாம். மற்ற அமைப்புக்களில் அரசியலைப் புகுத்தாது, சமூக சீர்திருத்தத்துக்கென, அவற்றைப் பயன்படுத்தலாம். இவ்விண்ணப்

நாட்டுக்குரிய தொண்டு

பத்தை 'ஜஸ்டிஸ்' கட்சி (பிராமணரல்லாத)த் தலைவரை நோக்கிச் செய்துகொள்கிறேன். 'ஜஸ்டிஸ்' கட்சியார், காங்கிரஸில் சேர்ந்து, தேசத் தொண்டு செய்யுமாறும், அன்னார் தமது தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தைச் சமுக சீர்திருத்தத்துக்கெனப் பயன் படுத்துமாறும் வேண்டுகிறேன்.

விதி முறை அமைப்பை விரும்புவோர் அந்நெறி பற்றிச் செல்வாராக. அவ்வமைப்பை விரும்பாதார் யான் குறிப்பிடுஞ் சன்மார்க்க சங்கத்தில் சேர்ந்து உழைப்பாராக. அது மக்களாகப் பிறந்த அனைவர்க்கும் உரியது.

## சன்மார்க்க சங்கம்

சன்மார்க்க சங்கத்தைப்பற்றி முன்னர் ஒருமுறை 'நவசக்தி' பத்திரிகையில் எழுதியுள்ளேன். அதன் ஒரு பகுதியை ஈண்டு எடுத்துக் காட்டுகிறேன்.

சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுக ஒரு கூட்டம் வேண்டற்பாலது. அதுவே 'சன்மார்க்க சங்கம்' என்பது. (க) சங்க நோக்கம் என்னை? (உ) சங்க அங்கத்தவர் யாவர்? (ங) நிர்வாக அங்கத்தவர் யாவர்? (ச) அமைச்சர் எவர்? (ரு) தலைவர் எவர்? (சு) சந்தா எவ்வளவு? இவ் வினாக்கட்கு யான் இறுக்கப்புகும் விடை சிலர்க்கு வியப்பூட்டும்.

சங்கம்

(க) சங்க நோக்கத்தையும், அந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத்தக்க முறைகளையும் ஈண்டு விரிக்கில் அவை பெருகும். அவை தொன்று தொட்டு நிலவி வருவன. ஆனால் காலநிலைக் கேற்றவாறு அவை

ஓரளவில் நடைமுறைப் பொருட்டுக் கணிக்கப்படல் வேண்டும். ஈண்டு அவற்றைப் பற்றிப் பொதுப்படச் சுருங்கச் சொல்கிறேன்.

சத்தாகிய கடவுள், யாண்டும் வீற்றிருத்தலால், எவ்வுயிர்க்கும் மனமொழி மெய்களால் தீங்கு நிகழ்த்தாது, தன்னுயிரைத் தான் பரிந்து ஓம்புமாறு போல், மன்னுயிரையும் ஓம்பி, அவ்வுயிர் நலன் கருதித் தொண்டு செய்தல் சங்கத்தின் தலையாய நோக்கம். இப்பெரு நோக்கத்தை நிறைவேற்ற அகமுகத்திலும் புறமுகத்திலும் பணி செய்தல் வேண்டும்.

உயிர்த் தொண்டு கடவுள் தொண்டாம்

**அகமுகப் பணிகளாவன** :—அகத்திலுள்ள மெய்ப்பொருளைக் காணவேண்டி, அழுக்காறு அவா வெகுளி முதலிய தீ நீர்மைகளைக் களைதல், கொலை களவு கள் காமம் பொய்யெனும் ஐம்பெரும் பாவம் நிகழாதவாறு தன்னைக் காத்தல் முதலியன.

**புறப்பணிகளாவன** :—தேசத் தொண்டு, அத்தொண்டிற்கு இடையூறாக உள்ள குறைகளைக் களைதல் முதலியன. தேசத் தொண்டும் கால நிலையைப் பொறுத்து நிற்பது. இப்பொழுது நமது நாட்டிலுள்ள குறைபாடுகளில் கவலை செலுத்தி, அவற்றைக் களையப் பாடுபடல் சிறந்த தேசத் தொண்டாகும். சுதேசியம், பெண்ணுரிமை, தீண்டாமை விலக்கல், வகுப்புப் பூசலொழித்தல், கருத்து வேற்றுமைக்கு மதிப்புக் கொடுத்தல், தேசத்திற் பிறந்தாரிடை அன்பு வளர்த்தல், கண்மூடி வழக்க ஒழுக்கங்களை அன்பு வழியில் தொலைத்தல் முதலிய அறத்துறைகளை ஓம்ப முயலுதல் இக்காலத்துக்

குரிய சிறந்த தேசத்தொண்டாகும். இதைப் பற்றி இன்னும் விரிக்கிற் பெருகும்.

(உ) உலகிலுள்ள அனைவரும் சன்மார்க்கத்தை விரும்புகிறார்; ஆனால் சிலரே விரும்பும் வழி நிற்க முயல்கிறார்; அவ்வழி நிற்பவரோ மிகச் சிலர். இம் முத்திறத்தாருஞ் சன்மார்க்க சங்க அங்கத்தவராவர். ஆகவே, இவ்வுலகிலுள்ள கடவுள் பிள்ளைகள் அனைவரும் சன்மார்க்க சங்க அங்கத்தவரென்க.

(ங) (அவருள்) நிர்வாக சபையார்: தம்முயிர் போல், மன்னுயிரையும் கொண்டு ஒழுகும் அருளொழுக்கத்தில் தேர்ச்சி பெற்றவர்.

(ச) அமைச்சர்: நமது கண்முன் காட்சியளிக்கும் இயற்கை அன்னையார்.

(ரு) தலைவர்: சத்தெனுஞ் செம்பொருளாகிய அருட் கடவுள்.

(சு) சந்தா: உயிர்களிடத்துச் செலுத்தும் அருள்.

இவை சங்கத்தின் அமைப்பாகும். சன்மார்க்க சங்கத்தின் அமைப்பின் வகை குறித்துச் சமயம் நேர்ந்துழி இன்னும் விரித்துக் கூறுவேன். இச் 'சன்மார்க்க சங்கமே' என்னால் அடிக்கடி குறிப்பிடப்படுவது.

இப்பெருஞ் சங்கத்துக்குக் கிளைகளாகப் பல சங்கங்கள் ஆங்காங்கே அமைத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு வீட்டிலும் கிளைச்சங்கம் அமைக்கலாம். வீட்டுத் தலைவனும் தலைவியும் முறையே சங்கத்தின் தலைவராகவும் அமைச்சராகவும் இருக்கலாம். வீட்டிலுள்ள

மற்றவர் சங்கத்தின் அங்கத்தவராகலாம். இவர் சங்க நோக்கத்தை நிறைவேற்ற முயலல் வேண்டும்.

சன்மார்க்க போதனைக்கென ஒரு சங்கம் ஒவ்வொரு தெருவிலும், ஒவ்வொரு கிராமத்திலும் அமைத்துக் கொள்ளலாம். சங்கத்துக்கெனப் பெருங் கட்டிடங்கள் எழுப்ப வேண்டுவதில்லை. ஓர் அழகிய சிறு நிலையம் சாலும். சங்கத்துக்கெனத் தலைவர் அமைச்சர் முதலியோரைத் தெரிந்தெடுத்தல், சந்தா சேர்த்து வரவு செலவு கணக்குப் படித்தல் முதலியன வேண்டா; வேண்டா. தேர்தலும், பொருளீட்டமும் மக்களைச் சன்மார்க்கத்தில் செலுத்தா. அவை முனைப்பை எழுப்பிப் போர் மூட்டும். சங்கத்தின் எவ்வினைக்காதல் பொருள் வேண்டியிருப்பின், அவ் வினைக்கெனப் பொருள் சேர்த்து, அவ்வினை யாற்றல் வேண்டும். பின்னை அப்பொருளில் மிகுதி நின்றால், அதை உடனே ஏழை மக்கட்குப் பங்கிட்டுக் கொடுத்தல் வேண்டும். பெரும்பொருள் செலவாகும் வினை ஒன்றும் சங்கத்தில் நடைபெறுதல் கூடாது. சங்கத்துக்கெனத் தனிநிதி கூடவே கூடாது. பெரு நிதியால் இக்கால மடங்களும், கோயில்களும் பேயுறையும் இருட் குகைகளாக மாறிய தொன்றே நமக்கு எடுத்துக்காட்டு. ஆதலால், விலங்குணர்வும் பேயுணர்வும் தோன்றாத முறையில் சங்கத்தை நடாத்தல் வேண்டும். சங்கத்தில் அருளொழுக்கத்தில் முதிர்ச்சி பெற்றோரைக் கொண்டு சன்மார்க்க போதனை செய்விக்கலாம். சங்க நோக்கத்தை ஒட்டிப் பலதிறத் தொண்டுகள் செய்யலாம்.

சன்மார்க்கம் இன்னது என்றும், சன்மார்க்கத்துக்கு இடையூறாகவுள்ள கொடுமைகள் இன்ன இன்ன என்றும் மிகத் தெளிவாக இராமலிங்க சுவாமிகள் உலகிற்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள். அவ்வறிவுறுத்தல்களிற் சில வருமாறு :—

'நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ
விழித்திதுபார் என்றெனக்கு விளம்பியசற் குருவே
கால்வருணங் கலையாதே வீணில்அலை யாதே
காண்பனஎல் லாம்எனக்குக் காட்டியமெய்ப் பொருளே
மால்வருணம் கடந்தவரை மேல்வருணத் தேற்ற
வணங்குநடத் தரசேஎன் மாலைஅணிந் தருளே'

'கலையுரைத்த கற்பனையே நிலைஎனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக
மலைவுறுசன் மார்க்கம்ஒன்றே நிலைபெறஎவ் வுலகும்
வாழ்ந்தோங்கக் கருதிஅருள் வழங்கினைஎன் றனக்கே
உலைவறும்இப் பொழுதேநற் றருணமென நீயே
உணர்த்தினைவந் தணைந்தருள்வாய் உண்மையுரைத் தவனே
சிலைநிகர்வன் மனங்கரைத்துத் திருவமுதம் அளித்தோய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே'

'மதமென்றும் சமயமென்றும் சாத்திரங்க ளென்றும்
மன்னுகின்ற தேவரென்றும் மற்றவர்கள் வாழும்
பதமென்றும் பதமடைந்த பத்தரநு பவிக்கப்
பட்டஅனு பவங்களென்றும் பற்பலவா விரிந்த
மதமொன்றுந் தெரியாதே மயங்கியஎன் றனக்கே
வெட்டவெளி யாயறிவித் திட்டஅருள் இறையே
சதமொன்றுஞ் சுத்தசிவ சன்மார்க்கப் பொதுவில்
தனிநடஞ்செய் அரசேஎன் சாற்றும்அணிந் தருளே'

'சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த
சாத்திரக்குப் பைகளெல்லாம் பாத்திரமன் றெனவே
ஆதியிலென் உளத்திருந்தே அறிவித்த படியே
அன்பாலின் றுண்மைநிலை அறிவிக்க அறிந்தேன்
ஓதியுணர்ந் தோர்புகழுஞ் சமரசசன் மார்க்கம்
உற்றேன்சிற் சபைகாணப் பெற்றேன்மெய்ப் பொருளாம்
சோதிநடத் தரசைஎன்றன் உயிர்க்குயிராம் பதியைச்
சுத்தசிவ நிறைவையுள்ளே பெற்றுமகிழ்ந் தேனே'

'தயையுடையார் எல்லாரும் சமரசசன் மார்க்கம்
சார்ந்தவரே இங்கவர்கள் தம்மோடுங் கூடி
நயமுறுநல் லருள்நெறியிற் களித்துவிளை யாடி
நண்ணுகஎன் றெனக்கிசைந்து நண்புறுசற் குருவே
உயலுறும்என் உயிர்க்கினிய உறவேஎன் அறிவில்
ஓங்கியபேர் அன்பேஎன் அன்பிலுறும் ஒளியே
மயலறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றுமணி மன்றில்
மாநடத்தென் அரசேஎன் மாலை அணிந் தருளே'

'அருளுடையார் எல்லாரும் சமரசசன் மார்க்கம்
அடைந்தவரே ஆதலினால் அவருடனே கூடித்
தெருளுடைய அருள்நெறியில் களித்துவிளை யாடிச்
செழித்திடுக வாழ்கவெனச் செப்பியசற் குருவே
பொருளுடைய பெருங்கருணைப் பூரணமெய்ச் சிவமே
போதாந்த முதலாறும் நிறைந்தொளிரும் ஒளியே
மருளுடையார் தமக்குமருள் நீங்கமணிப் பொதுவில்
வயங்குநடத் தரசேஎன் மாலையும்ஏற் றருளே'

'தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்
சார்திருக் கோயில்கண் டிடவும்

தங்கமே பெருஞ்சற் சங்கநீ டூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்தனைப் பாடி
ஆடவும் இச்சைகாண் எந்தாய்'

'மார்க்கமெலாம் ஒன்றாகும் மாநிலத்தீர் வாய்மையிது
தூக்கமெலாம் நீக்கித் துணிந்துளத்தே—ஏக்கம்விட்டுச்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியநீர்
நன்மார்க்கஞ் சேர்வீர்இந் நாள்'

இச்சன்மார்க்கத்தில் சேருமாறு எல்லாரையும் வேண்டுகிறேன். வந்தேமாதரம்.

திரு. வி. க.

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

*Univ. Grants Commission.*

# திரு. வி. கலியாணசுந்தரனார்
# இயற்றிய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் ... | 12 | 8 |
| பெரியபுராணம்—அரும்பத விசேட ஆராய்ச்சிக்குறிப்புரையும் வசனமும் | (அச்சில்) | |
| திருக்குறள் விரிவுரை: (முதற்பகுதி - பாயிரம் - நான்கதிகாரம் இரண்டாம்பகுதி அறத்துப்பால்-ஆறு அதிகாரம்) | 5 | 0 |
| தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு | (அச்சில்) | |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ... | 5 | 0 |
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை ... | 4 | 0 |
| இந்தியாவும் விடுதலையும் | (அச்சில்) | |
| தமிழ்த் தென்றல் (அச்சில்) உள்ளொளி ... | 3 | 0 |
| நாயன்மார் வரலாறு (அச்சில்) முருகன் அல்லது அழகு | 2 | 0 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து ... | 1 | 4 |
| இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் ... | 1 | 4 |
| முடியா ? காதலா ? சீர்திருத்தமா ? ... | 1 | 4 |
| பொதுமை வேட்டல் | (அச்சில்) | |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே ... | 1 | 0 |
| சைவத்தின் சமரசம் 0 12 சைவத் திறவு ... | 0 | 8 |
| சன்மார்க்க போதமும் திறவும் ... | 1 | 8 |
| சமரச சன்மார்க்கத் திறவு ... | 0 | 4 |
| தமிழ் நாடும் நம்மாழ்வாரும் ... | 0 | 12 |
| இமயமலை அல்லது தியானம் ... | 0 | 8 |
| காரைக்காலம்மையார் திருமுறை—அரும்பதக் குறிப்புரையுடன் 0 6 ஆலமும் அமுதமும் ... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் 0 4 சித்தமார்க்கம் | 0 | 6 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... | 0 | 4 |
| உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல் ... | 0 | 6 |
| முருகன் அருள் வேட்டல் ... | 0 | 8 |
| திருமால் அருள் வேட்டல் ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் அருள் வேட்டல், 0 6 புதுமை வேட்டல் | 0 | 10 |
| நாயன்மார் திறம் 0 4 சமரச தீபம் ... | 0 | 6 |
| நினைப்பவர் மனம் 0 4 சைவ சமய சாரம் ... | 0 | 2 |

சாது அச்சுக்கூடம், (முருகவேள் புத்தகசாலை),
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

## அரிய தமிழ் நூல்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| விநாயகர் பனுவல் திரட்டு | ... | 0 | 6 |
| முருகவேள் பனுவல் திரட்டு | ... | 1 | 4 |
| முருகன் திருவருட்பா (இராமலிங்க சுவாமிகள்) | ... | 0 | 8 |
| தேவி தோத்திர மஞ்சரி | ... | 0 | 4 |
| குசேலோ பாக்கியாநம் (மூலமும் உரையும்) | ... | 1 | 4 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும்பத உரையும் சாத்திரக் குறிப்பும்) | ... | 0 | 12 |
| திருப்போரூர் சந்நிதிமுறை | ... | 0 | 10 |
| ஆறெழுத்தந்தாதி | ... | 0 | 2 |
| க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ் | ... | 0 | 4 |
| சமயத் தொகுதி | ... | 0 | 2 |
| சிவாலய பூஜை விளக்கம் | ... | 0 | 1 |
| சிவபுண்ணியத் தெளிவு | ... | 0 | 3 |

---

## கந்தர் அநுபூதி

சென்னை, இராயப்பேட்டை, வேத ப்ரவசன மந்திரத்து

**சிவத்யானனந்த மஹரிஷி யவர்கள் எழுதிய**

### கூடார்த்த தீபிகை

என்னும் புத்துரையோடு கூடியது. இதுவரை இவ்வகைத் தெளிவான அநுபூதி உரை வெளிவரவில்லையென்று படித்தோர் பலரும் கொண்டாடிக் கூறியுள்ளார். விலை ரூபா 1.

சாது அச்சுக்கூடம், (முருகவேள் புத்தகசாலை),
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.